மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுகுறித்து ஏற்கெனவே சொன்னேன். வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கைரேகை பதிய முடியாதவர்கள் ஆகியோர், "நான் இந்தக் கடைக்கு வந்து பொருட்களைப் பெற முடியவில்லை" என்று சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடை ஊழியர்களிடத்தில் தெரிவித்தால், அவர்கள் விண்ணப்பங்களை வழங்குவார்கள், அங்கேயே விண்ணப்பங்கள் இருக்கின்றன. அந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தால், வட்ட வழங்கல் அலுவலர் அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களிடத்தில் அனுமதி வாங்கி, அந்தப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு துறை ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

உதவி செயற்பொறியாளர் அலுவலகம்

***7578—திரு. சேவூர் S. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி கிழக்கு, தெற்கு மற்றும் திருமணி ஆகிய மின் பிரிவு அலுவலகங்களை இணைத்து, விண்ணமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 மார்ச் 22]

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில், ஆரணி கிழக்கு, தெற்கு மற்றும் திருமணி ஆகிய மின்சாரப் பிரிவு அலுவலகங்களை இணைத்து, விண்ணமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கழக நிறுவனர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை வணங்கி, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற ஆரணி மேற்கு உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் ஆரணி கிராமியம் கிழக்கு, ஆரணி கிராமியம் மேற்கு, ஆரணி கிராமியம் தெற்கு, களம்பூர், திருமணி ஆகிய 5 பிரிவு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த 5 பிரிவு அலுவலகங்களில் கிட்டத்தட்ட ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திற்கும் 10,000 மின் நுகர்வோர்கள் இருக்கிறார்கள். விண்ணமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் அலுவலகம் அமைத்தால் விவசாயிகள் எளிதாகச் சென்று வர, மிகவும் ஏதுவாக இருக்கும். விண்ணமங்கலம் பகுதி, ஆற்காடு–விழுப்புரம் பிரதான சாலையின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. விண்ணமங்கலத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 20–க்கும் மேற்பட்ட கிராமங்களும் 10–க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளும் இருக்கின்றன. அவர்கள் அனைவரும் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆரணிக்குச் சென்றுதான் அத்தனை மின் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, விண்ணமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை அமைத்துக் கொடுக்க ஆவன

செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல அலுவலகங்களைப் பொறுத்தவரையில், அதிகபட்சமாக திருச்சியில் 48,99,000 மின் இணைப்புகளும், குறைந்தபட்சமாக சென்னை வடக்கில் 25,76,000 மின் இணைப்புகளும், வட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகபட்சமாக திருநெல்வேலியில் 13,89,000 மின் இணைப்புகளும், குறைந்தபட்சமாக நீலகிரியில் 2,47,000 மின் இணைப்புகளும், கோட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகபட்சமாக தாம்பரத்தில் 6,63,000 மின் இணைப்புகளும், குறைந்தபட்சமாக கூடலூரில் 67,000 மின் இணைப்புகளும், உப கோட்டத்தைப் பொறுத்தவரையில், மேடவாக்கத்தில் அதிகபட்சமாக 1,73,000 மின் இணைப்புகளும், குறைந்தபட்சமாக சென்னையில் 4,563 மின் இணைப்புகளும், பிரிவு அலுவலகங்களைப் பொறுத்தவரையில், அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 52,818 மின் இணைப்புகளும், குறைந்தபட்சமாக செம்பரம்பாக்கத்தில் 394 மின் இணைப்புகளும் என, குறைந்தபட்சம், அதிகபட்சம் என இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. இதைச் சீரமைத்து சிறந்த நிருவாகத்தை வழங்க வேண்டுமென்று தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள், இந்த ஆண்டு புதியதாக தஞ்சாவூர், திருவண்ணாமலை, கரூர் என 3 புதிய மண்டல அலுவலகங்களை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். இதன் தொடர்ச்சியாக கோட்டங்கள், உப கோட்டங்கள், வட்டங்கள் என சீரமைக்கின்ற பணிகள் நிருவாகரீதியாக எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து, அங்கே இருக்கக்கூடிய மின் இணைப்புகளுக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில்,*

2022 மார்ச் 22]

திருவண்ணாமலையில் 8 கோட்டப் பொறியாளர்களை உள்ளடக்கிய ஒரு மின் பகிர்மான வட்டம், S.E. Office *இயங்கி வருகிறது. இந்த* S.E. Office*–ஐப் பிரித்து ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு, ஆரணி, சேத்துப்பட்டு, செய்யாறு, வந்தவாசி ஆகிய பகுதிகளை இணைத்து ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு* S.E. Office *அமைக்க ஏற்கெனவே அம்மாவின் அரசால் அப்போது மின்சாரத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. தங்கமணி அவர்களால், சட்டப் பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணத்தினால் அது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மின் பகிர்மான வட்டம் அமைக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப்போல, பிரிவு அலுவலகங்கள் தொடங்கி மண்டல அலுவலகங்கள் வரை, குறைந்தபட்சம், அதிகபட்சம் என மின் இணைப்புகளில் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. அதைச் சீரமைக்கின்ற நடவடிக்கைகள், வாரியத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பிரிவு 17 மற்றும் பிரிவு 53 வகை நிலங்களில் வாழக்கூடிய சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்களுடைய இல்லங்களுக்கு மின் இணைப்பு வசதியில்லாமல் தவித்து வருகின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும்*

தேர்தலுக்கு முன்பு மேட்டுப்பாளையத்திற்கு வருகை புரிந்தபோது, ஒரு சின்னஞ்சிறு சிறுமி எழுப்பிய கேள்விக்கு, 'ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில் மின் இணைப்பு வழங்கப்படும்' என்ற உத்தரவாதத்தினைத் தந்திருக்கின்றார்கள். தொடர்ந்து மூன்று முறை நம்பிக்கையோடு இந்த அவையிலே நான் இந்தக் கேள்வியினை வைக்கின்றேன். நீதிமன்றத் தீர்ப்பு இதற்குத் தடையாக இருக்கின்றது என்று 2004 ஆம் ஆண்டு முதல் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நீதிமன்றத் தீர்ப்புகள் இதற்குத் தடையாக இருந்தாலும், தகுந்த வாதங்களின் மூலமாக அந்தத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து, தன் மக்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டியது நல்லாட்சி வழங்கக்கூடிய ஓர் அரசினுடைய கடமை. எனவே, இந்த அரசு, அந்த இல்லங்களுக்கு மின் இணைப்பு வழங்கி எங்களையெல்லாம் இருளிலிருந்து காப்பாற்றுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் உரிய மின் இணைப்புகள் வழங்க முடியாத சூழல் இருக்கின்றது. அதுகுறித்து ஏற்கெனவே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், துறை வாயிலாக அவருடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். வரக்கூடிய ஆண்டுகளில் இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, துறை வாயிலாக வனத் துறையிலும் பேசி, அதேபோல நீதிமன்றத்தினுடைய வழக்குகள் குறித்தும் ஆய்ந்தும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கந்திலி ஊராட்சி ஒன்றியப் பகுதியானது, 39 ஊராட்சிப் பகுதிகளைக் கொண்டதாகவும், ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்கள் வசிக்கக்கூடிய விவசாயிகள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. அந்தப் பகுதியில் கடந்த காலங்களில் மழை பெய்த

2022 மார்ச் 22]

காரணத்தினால், அதிகப்படியான விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் பம்ப்செட்டுகளை இயக்குகின்ற காரணத்தினால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகையால், இந்த ஒன்றியத்தின் மையப் பகுதிகளாகவுள்ள நத்தம் ஊராட்சிப் பகுதி அல்லது சேவாத்தூர் ஊராட்சிப் பகுதியை மையமாகக் கொண்டு 110 கிலோ வாட் கொண்ட துணை மின் நிலையத்தை அரசு அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சீரான மின் விநியோகம் செய்வதற்காக கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, தேவையேற்படின் துறை வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23–9–2021 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த திட்டத்தை தங்களுடைய பொற்கரங்களால் தொடங்கி வைத்தார்கள். இன்றுவரை 87,465 மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமிருக்கக்கூடிய மின் இணைப்புகளை வழங்கும் பணி இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புத் திட்டம், இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்; மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலே அனல் மின் நிலையம் சிறப்பாக இயங்கி வருகிறது. அங்கே fly ash இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திற்குப் பறந்து சென்று பொதுமக்களுக்குத் தொந்தரவு செய்கிறது. எனவே,*

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் scraper *போட்டு அந்த* fly ash–*ஐ தடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில் ஏற்கெனவே அந்தப் பகுதிகளுக்கு ஆய்வுக்கு சென்றபோது, இதுகுறித்து எடுத்துச் சொன்னார்கள். அதுகுறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். இன்றே அதிகாரிகளுக்கு மீண்டும் அறிவுறுத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்குள்ளே அவ்வளவு பிரச்சினையா இருக்கின்றது?*

திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்த, 'விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் 24 மணி நேரமும் வழங்கப்படும்' என்ற திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டு தேர்தல் அறிவிப்பதற்கு ஒரு மாதம் முன்பாக, 25–2–2021 ஆம் நாளன்று 24 மணி நேரமும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று தேர்தலுக்காக அறிவிப்பு செய்தார்கள். மும்முனை மின்சாரம் வழங்குவதற்கான முழு கட்டமைப்பு கடந்த ஆட்சியில் உருவாக்கப்படவில்லை, அதற்கான நிதியும் ஒதுக்கப்படவில்லை.*

2022 மார்ச் 22]

இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால், அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, இந்தக் கட்டமைப்புப் பணிகள் முடிந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், அதற்கான பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

பனை பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலை

***22052—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பகுதியில் பனை பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பகுதியில் பனை பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பனை, அதை நாளும் நினை' என்ற தமிழ் மொழியை, நான் அறிந்ததைவிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூடுதலாக அறிந்திருப்பார்கள். பராமரிப்பு இன்றியும் பலன் தருபவை பனை மரங்கள். 'பனை மரம் விதையிட்ட நாளைத்*